## இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள

# மீனவர்கள் - மீன்பிடிப் படகுகளை விடுவித்திட தூதரக நடவடிக்கை எடுத்திடுவீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஜன.11–

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அவர்களை இலங்கைக் கடற்படையினர் 08.01.2025 அன்று கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள 10 மீனவர்களையும், இலங்கை வசம் ஏற்கெனவே உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (09.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், காரைக்கால் மீன்பிடித் துறை முகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 இந்திய மீனவர்களையும் அவர்களது மீன்பிடி விசைப்படகையும் 08.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கைது செய்யப்பட்ட 10 மீனவர்களில், 6 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் (5 பேர் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்) என்று குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே பெரிதும் நம்பியுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினர் இதுபோன்று மீனவர்களைச் சிறைபிடிப்பதால், அவர்களது குடும்பத்தினர் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், தற்போதைய நிலவரப்படி 102 மீனவர்களும், 210 மீன்பிடிபடகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே, உரிய தூதரக வழிமுறைகளை முன்னெடுத்து, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.1.2025) தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி, பணிக்காலத்தின்போது உயிரிழந்த 311 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி கு.இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்), ஏ.ஆர்.மஸ்கர்னஸ் உள்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சமூக வலைதளங்களில்

# உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடுவீர்!

### பெருநகர சென்னை காவல் ஆணையரிடம்–அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார்!

**சென்னை, ஜன.11**

**சமூக வலைதளங்களில் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் பெருநகர சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளித்துள்ளார்.**

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள்மீது சமூக ஊடகங்களில் வதந்திகள் மற்றும் அவதூறு வீடியோக்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை பரப்பி வருவதை அறிந்த கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் பெருநகர சென்னை காவல்



ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :

நான் தி.மு.க.வின் சட்டப் பிரிவு இணைச் செயலாளராக உள்ளேன். எங்கள் அமைப்புச் செயலர் ஆர். எஸ்.பாரதியைப் பற்றி சமூக ஊடகங்களில் நேர்மையற்ற கூறுகளால் பரப்பப்பட்ட சமீபத்திய ட்ரெண்டிங் தகவல் குறித்து நான் கவலைப் படுகிறேன். இந்த வாசகம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகர் குற்றம் சாட்டப்பட்டவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதை நமது அமைப்புச் செயலாளர் ஒப்புக்கொண்டது போலவும், அந்தச் செய்தி புதிய தலைமுறை செய்திச் சேனலில் வந்ததாகவும் தெரிகிறது.

இது முழுக்க முழுக்க எங்கள் அமைப்புச் செயலாளரின் நற்பெயரையும், எங்கள் கட்சியின் நற்பெயரையும் குறைக்கும் வகையில் சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரச்சாரமாகும்.

அண்ணா பல்கலைக் கழக விவகாரம் தற்போது பரபரப்பாக உள்ள நிலையில், அனைத்து எதிர்க்கட்சிகளும் எப்படியாவது ஆளுங்கட்சியை கயிறு கட்டி, அரசியல் முன்னிலை பெற வேண்டும் என்ற நோக்கில் இந்த விவகாரத்தில் இணைக்க முயற்சிக்கின்றன. பொதுவாக சமூக ஊடகங்களில் வீடியோக்கள் மற்றும் செய்திகளின் உண்மைத்தன்மையை சரிபார்க்கும் நியூஸ்செக்கர் சேனல், உண்மை உண்மைகளை சரிபார்த்து, அந்த உண்மை தவறானது என்று அறிவித்துள்ளது.

உங்கள் சரிபார்ப்பிற்காக மேற்படி செய்தியின் நகலையும் இணைத்துள்ளேன். இது போன்ற அவதூறான புழக்கத்தில் ஈடுபட்ட மற்றும் உதவிய அனைவருக்கும் எதிராக தகுந்த கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அப்புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

குமரி, ஜன.11-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், நகர கழக செயலாளர் என்.நாகூர்கான், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ரா. பார்த்த சாரதி, ஆர்.சதாசிவன் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தீர்மானம் எண் :1 திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு வெள்ளி விழா கொண்டாட்டத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை புரிந்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு 30.12.2024, 31.12.2024 ஆகிய தினங்களில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டு சிறப்பான முறையில் மாபெரும் வரவேற்பு அளித்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தோழர்கள் ஆகியோருக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் எண்: 2 கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், கன்னியாகுமரி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் எண்: 3 கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் இஸ்ரோ தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நாகர்கோவில் மேலக்காட்டுவிளையைச் சேர்ந்த விஞ்ஞானி வி. நாராயணன் அவர்களின் பணி சிறக்க இக்கூட்டம் மனதார பாராட்டுகிறது.

தீர்மானம் எண்: 4, தைத் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைத்து இல்லங்களிலும் பொங்கல் விழாவை வெகு விமரிசையாக கொண்டாட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் எண்: 5, அண்மையில் காலஞ்சென்ற முன்னாள் பாரத பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கழக தலைவருமான முத்தமிழறிஞர் மீது இருந்த அன்பின் காரணமாக சிறப்பு மிகு திட்டங்களை தமிழகத்தின் வளர்ச்சிக்காக தந்தவர். அன்னாரின் மறைவிற்கும், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்களில் முக்கிய தலைவரில் ஒருவர் E.V.K.S. இளங்கோவன் அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஐ. கேட்சன், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், நகர கழக செயலாளர் என்.நாகூர்கான், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம். சேக்மீரான், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ரா.பார்த்தசாரதி, ஆர்.சதாசிவன் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 4, 8–இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 4 | கோபிசெட்டிப்பாளையம் | இராமயம்மாள் திருமண மண்டபம், கோபிசெட்டிப்பாளையம். |
| | மாலை 3.00 மணி | | பவானிசாகர் | கவரா மஹால், சத்தி – அத்தாணி சாலை, சத்தியமங்கலம். |
| 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | பவானி | பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடி, பவானி |
| | மாலை 3.00 மணி | | அந்தியூர் | எஸ்.எம்.பி. திருமண மண்டபம், அத்தாணி, அந்தியூர் |
| | காலை 10.00 மணி | 8 | முதுகுளத்தூர் | ஸ்ரீ சர்வ விநாயகா சாய் மஹால், முதுகுளத்தூர். |
| | மாலை 3.00 மணி | | பரமக்குடி | ஏ.பி.ஷா. மஹால், உலகநாதபுரம், பரமக்குடி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 08-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



நீலகிரி மாவட்ட துணை செயலாளர் ஜே.ரவிகுமார் தந்தை கழக மூத்த முன்னோடி மறைந்த என்.பி.ஜம்புலிங்கம் அவர்களின் உடலுக்கு நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் கழக நிர்வாகிகளுடன் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.